குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண்.281/2022

அ.சா.3

2024–ம் ஆண்டு டிசம்பர் 18–ம் தேதி புதன்கிழமை அரசு தரப்பு சாட்சி 03–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.ஆனந்தன் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மோகன்ராஜ் | ஜாதி | |
| தந்தை பெயர் | கிருஷ்ணமூர்த்தி | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 01.11 மணி,

Accused Siva absent. Petition U/s.317 Cr.P.C filed and allowed. Advocate Mrs.R.Divya present for Advocate Mr.Thirumugam for accused. APP Mr.P.Suresh present.

**முதல் விசாரணை :**

**1.** நான், இரும்பாலையில் குடியிருந்து, நெசவு தொழில் செய்து வருகிறேன். கடந்த 12.01.2020 ஆம் தேதி இரவு 08.00 மணியளவில் இருசன் என்பவர், பிரவீன் குமாருக்கு அம்மன் தியேட்டர் அருகே விபத்து நடந்துவிட்டதாக தகவல் சொன்னார். நான், சம்பவ இடமான தாரமங்கலம் – அழகுசமுத்திரம் சாலையில் விபத்து நடந்த இடத்திற்கு சென்று பார்த்தபோது, பிரவீன் குமாருக்கு தலையில் அடிப்பட்டு, அவரை சேலம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம்.

2. அங்கு, அவர் இறந்துவிட்டதாக தகவல் சொன்னார்கள். பிரவீன் குமார் தாரமங்கலம் நோக்கி சென்றபோது, சாலையில் இடதுபக்கமாக இண்டிகேட்டர் போடாமல் நின்றிருந்த லாரியின் பின்னால் மோதி விபத்து ஏற்பட்டதாக சொன்னார்கள். போலிசார் விசாரித்தார்கள்.

**( அரசு தரப்பு சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்க கேட்டதின் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)**

போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும், அந்த விசாரணையில் கடந்த 12.01.2020 ஆம் தேதி 20.00 மணியளவில் பிரவீன் குமார் என்பவர், டி.என்.52 எல். 2017 என்ற பதிவெண் கொண்ட பல்சர் இருசக்கர வாகனம் சேலம் – தாரமங்கலம் சாலையில் தாரமங்கலம் நோக்கி அழகுசமுத்திரம் அம்மன் தியேட்டர் அருகே சென்றபோது, அவருக்கு முன்னால் எதிரி சிவா என்பவர் டி.என்.52 ஏ 0303 என்ற பதிவெண் கொண்ட டாரஸ் லாரியை தாரமங்கலம் நோக்கி ஓட்டிச்சென்று திடீரென எந்தவித சிக்னல் செய்யாமலும், இண்டிகேட்டர் போடாமலும் மேற்படி லாரியை அஜாக்கிரதையாக சாலையில், நிறுத்தியதால் பின்னால் வந்த பிரவீன் குமார், மேற்படி லாரியின் பின்னால் மோதி விபத்து நடந்ததை நான் நேரில் பார்த்துவிட்டு, தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டது. குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.

**மறு விசாரணை : இல்லை**

விசாரணை முடிந்த நேரம்: மதியம் 01.17 மணி,

ஒம்/–ச.ஷர்மிளா,

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

ஓமலூர்.